DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 13/2022**

அ.சா.6

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முத்துமாணிக்கம் | Caste: | |
| Father's Name: | செல்லம் | Calling: | சார்பு ஆய்வாளர் ஓய்வு |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 07.11.2025

( 1,2 எதிரிகள் ஆஜர். 3 ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2025 ம் தேதி ஓய்வு பெற்று சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் வசித்து வருகிறேன். கடந்த 22.06.2021 ம் தேதி 13.30 மணிக்கு எமனேஸ்வரம் காவல்நிலையத்தில் நான் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது பரமக்குடி சந்தைக்கடை சிஎஸ்எம் போர்டிங் ரோட்டை சேர்ந்த செல்லையா மகன் நாகராஜான், வயது 49/2020 என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய கு.எண் 160/2021 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 342 IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 5**. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையுடன் அசல் புகார் மனுவை இணைத்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை

காவல் உயர் அதிகாரிகளுக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பிவைத்தேன். இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

நான் எமனேஸ்வரம் காவல்நிலையத்தில் 2020 முதல் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன் என்றால் 2019 முதல் சார்பு ஆய்வாளராக பணியாற்றினேன். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையின்படி 22.06.2021 ம் தேதி ஏற்கனவே இந்த புகார் மனுவை பெறுவதற்கு முன்பே புகார்தாரர் மீது 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை **எ.ம.சா.1**. எதிரிகளின் வீட்டிற்கும் காவல்நிலையத்திற்கும் அரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் ஒரு கி.மீ தூரம் இருக்கும். புகார்தாரரின் வீட்டிற்கும் காவல்நிலையத்திற்கும் அரை கி.மீ தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். புகார்தாரர் மற்றும் எதிரிகளின் வீட்டிற்கு இடையில்தான் காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் 1ம் எதிரி மீது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக 10.11.2020 அன்று ஒரு புகார் கொடுத்து அந்த புகாரின் அடிப்படையில் இருதரப்பினர்களையும் வரவழைத்து நான் விசாரணை செய்தேன் என்றால் ஞாபகமில்லை. ஆவணங்களை பார்த்தால் சொல்ல முடியும். 1ம் எதிரி எங்கள் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சரவணன் மற்றும் புகார்தாரரையும் சேர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் Crl.O.P.No. 15543/2020 என்ற வழக்கினை கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக காவல்நிலையத்தில் தொந்தரவு கொடுக்கக்கூடாது எனவும் ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் இருக்கலாம் . அதுபற்றி எனக்கு தெரியாது. உயர்நீதிமன்றத்தில்

இருந்து வரும் உத்தரவு என்னுடைய பார்வைக்கு வராது என்றால் சரிதான். ஆய்வாளர் பார்வைக்கு செல்லும். டிஎஸ்பி பார்வைக்கும் செல்லும் என்றால் ஆய்வாளர் கொண்டு செல்லலாம். 10.11.2020ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் எங்கள் காவல்நிலையத்தில் விசாரணை செய்து சிவில் வழக்கு என்றும் தரப்பினர்கள் தக்க உரிமையியல் நீதிமன்றத்தில் நாடி தக்க பரிகாரம் பெற்று கொள்ளலாம் என்று முடித்துவிட்டதாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தெரிவித்ததன் பேரில் Crl.O.P 15543/2020 முடிக்கப்பட்டதா என்றால் தெரியாது. அவ்வாறு முடிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்க வந்த நாகராஜன் முதலில் சார்பு ஆய்வாளரை சரவணனை சந்தித்துவிட்டுதான் என்னை சந்திக்க வந்தார் என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சரவணனுடன் கலந்துதான் நாகராஜன் என்னிடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. சார்பு ஆய்வாளர் சரவணனும் புகார்தாரர் நாகராஜனும் நண்பர்கள் என்பதால் சார்பு ஆய்வாளர் சரவணன் கேட்டுக்கொண்டதற்கிணங்க நாகராஜன் கொடுத்த புகாரை பெற்று நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஏற்கனவே இவ்வழக்கு புகார்தாரர் நாகராஜன் மீது அதே நாளன்று புகார் கொடுத்துள்ளதால் அதற்கு பதிலடி வழக்காக இவ்வழக்கு புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை 22.06.2021ம் தேதி பதிவு செய்யப்பட்டு 23.06.2021 அன்றுதான் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால்

சரிதான். புகாரில் சாதியை பற்றி பேசியதாக மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேவா, அவரது மனைவி, தம்பி இளையராஜா ஆகியோர்கள் சேர்ந்து அசிங்கமாக பேசினார்கள் என புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் மீதும் காவல்நிலையத்தின் மீதும் 1ம் எதிரி வழக்கு தாக்கல் செய்ததால் 1ம் எதிரி புகார்தாரர் மீது புகார் கொடுத்த பிறகு எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக நாகராஜனிடம் பொய்யான புகார் பெற்று வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. புகார்தாரர் நாகராஜன் லாரி வைத்து தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. புகார் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கோடு பொய்யாக கொடுக்கப்பட்டது என்றும் புகாரில் சொல்லப்பட்டுள்ள சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)